# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 14/2016**

திரு. என். அய்யப்பன்,
த/பெ நடேசன் (லேட்),
பொற்பாலம்பட்டு கிராமம்,
மையனூர் அஞ்சல்,
சங்கராபுரம் வட்டம் . . . . மேல் முறையீட்டாளர்
(திரு. என். அய்யப்பன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
லயன்ஸ் கிளப் பில்டிங்,
சேலம் மெயின் ரோடு,
கள்ளக்குறிச்சி – 606 202. . . . . .எதிர்மனுதாரர்
(திரு. செல்வமணி, செயற்பொறியாளர்/சங்கராபுரம்)

**கேட்புரை நாள்: 10–5–2016**

**ஆணை நாள் : 31–5–2016**

திரு. என். அய்யப்பன், பொற்பாலம்பட்டு அவர்களின் 19.2.2016 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண் 14/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 10.5.2016 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>**

மேல்முறையீட்டாளர், அவருடைய தகப்பனார் பெயரில் பதிவு செய்துள்ள, விவசாய மின் இணைப்பு விண்ணப்பத்தினை அவரின் பெயருக்கு மாற்றம் செய்து, அவருக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளரின் தகப்பனார், திரு. அ. நடேச நாயக்கர், பொற்பாலம்பட்டு அவர்கள் தன்னுடைய புல எண் 64/2D இல் உள்ள கிணற்றிற்கு சாதாரன வரிசையில் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார் விண்ணப்பத்தின் பதிவு எண் 2620 நாள் 08.12.1987.

2.2 அவரின் விண்ணப்பத்திற்கு தயார் நிலையை பதிவு செய்ய 8.10.2009 அன்று 90 நாள் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் இறந்து விட்டதால் அவரின் வாரிசுதாரர்களில் ஒருவரான திரு. அய்யப்பன் அவர்கள் மற்ற வாரிசுதாரர்களின் ஒப்புதலுடன், மேற்கண்ட விவசாய விண்ணப்பத்தை தன்னுடைய பெயருக்கு மாற்ற வேண்டும் என்று 1–11–2013 அன்று மனு செய்துள்ளார்.

2.3 இது சம்பந்தமான தன்னுடைய மனுவை கள்ளகுறிச்சி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 17–10–2014 அன்று சமர்பித்துள்ளார். மன்றம் தன்னுடைய தீர்வை 27–11–2014 அன்று தெரிவித்துள்ளது.

2.4 மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர், இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறை தீர்ப்பாளர் முன் சமர்பித்துள்ளார்.

2.5 மன்ற விதி 8ன்படி, மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற முறையீட்டாளர் தன்னுடைய மேல் முறையீட்டை மன்றத்தின் ஆணை பிறப்பிக்கப்பட 30 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்பிக்கலாம். இருந்த போதிலும், மேல்முறையீட்டை குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு தகுந்த காரணம் உள்ளது என்று மின்குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால்

மேல்முறையீட்டு மனுவை குறிப்பிட்ட 30 நாட்களுக்கு பின்னரும் மின்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ளலாம்.

2.6 இந்த மேல்முறையீட்டாளர், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை 19.2.2016 அன்று மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார். மன்றத்தின் ஆணை 27.12.2014 அன்று வழங்கப்பட்டுள்ளது. எனவே, 25.1.2015க்குள் மேல்முறையீட்டு மனு சமப்பிக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆனால், தாமதமாக 19.2.2016 அன்றுதான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர், தன்னுடைய மனைவியின் உடல் நிலை குறைவால் மேல்முறையீட்டை சமர்பிப்பதற்கு தாமதமாகிவிட்டது எனவே, தாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளார் எனவே தாமதம் மன்னிக்கப்பட்டு, மனு மேல்முறையீட்டு மனு எண் 14/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

3.1 மேல்முறையீட்டாளர், தனியாக வாதங்கள் எதையும் தெரிவிக்கவில்லை எனவே, மின்குறைதீர் மன்றத்தில் அவர் சமர்பித்துள்ள வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

3.2 மனுதாரர் அவருடைய தந்தை திரு. நடேச நாயக்கர், பொற்பாலம்பட்டு, என்பவர் விண்ணப்ப பதிவு எண் : 2620, நாள் : 18.12.1987, மின்பளு 5 HP சாதாரண வரிசையில் விண்ணப்பித்திருந்தார். அதன் வருவாய் கிராமம் புல எண் : 64-2D–இல் விண்ணபத்திருந்தார். அவருடைய தந்தை இறந்துவிட்டார். அவர் 2010 – இல் வரைபடம், கணினி சிட்டா, அடங்கல், வாரிசு நகல் அனைத்தும் இணைத்து கொடுத்துள்ளார். வருவாய் கிராமம் மாற்றி தர சொத்துரிமை சான்று கொடுத்துள்ளார். V.A.O சான்று வாங்கி கொடுத்துள்ளார். அனைத்து சான்றுகளும் கொடுத்தும் அவருடைய மனுவை ஏற்றுகொள்ள மறுக்கிறார்கள். அவர் அரியலூர் சென்று உதவி பொறியாளரை கேட்டால் சங்கராபுரம் செயற்பொறியாளரை பார்க்க சொல்கிறார்கள். கணினி சிட்டாவில் கூட்டுதாரர் பெயர் இடம் பெறவில்லை என்று அவருடைய மனுவை நிராகரிக்கிறார்கள். வில்லங்கச்சான்று கேட்டார்கள் எடுத்து கொடுத்தும் அந்த கூட்டுதாரர் பெயர் இடம் பெற்றுள்ளது ஆனால் அதெல்லாம்

செல்லாது என்று அவரை அலைகழித்து இழுத்தடிக்கிறார்கள். அதனால் அவருக்கு பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு வழங்கிட கேட்டுகொள்கிறார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u> :–

4.1 கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம் சங்கராபுரம் கோட்டம் அரியலூர் பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட பொற்பாலம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. அ. நடேசநாய்க்கர் த/பெ.அப்பு நாயக்கர் அவர்கள் சாதாரண வரிசை திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு வேண்டிவிண்ணப்பம் பதிவு செய்துள்ளார் அதன் விண்ணப்ப பதிவு எண் : 2620 நாள் : 08.12.1987, அவ்விண்ணப்பத்தின் மீது மின்சாரம் வழங்க சர்வே எண்.64/2Dக்கு உரிய ஆவணங்களுடன் மோட்டார் தயார்நிலை பதிவு செய்ய விண்ணப்பதாரருக்கு 90 நாள் நோட்டீஸ் 08.10.2009ல் வழங்கப்பட்டது.

4.2 இந்நிலையில் விண்ணப்பதாரர் 24.12.2006ல் இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகளில் ஒருவரான திரு.ந.அய்யப்பன் த.பெ. நடேசன் (லேட்) பொற்பாலம்பட்டு அவர்கள் இறப்புசான்றிதழ், வாரிசு சான்றிதழ், வருவாய் ஆவணங்கள் மற்றும் வாரிசுதாரர்களின் ஒப்புதலுடன் தனது தகப்பனார் பெயருக்கு வந்துள்ள விவசாய மின் இணைப்பை தன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய கோரி கடந்த 01.11.2013ல் மனு செய்திருந்தார்.

4.3 இதன்படி மேற்கண்ட சர்வே எண்ணை கள ஆய்வு செய்ததில் மேற்கண்ட சர்வே.எண்.64/2Dல் இரண்டு கிணறுகள் உள்ளது தெரிய வந்தது அதில் ஒரு கிணற்றில் இரண்டு மின் இணைப்புகள் உள்ளது. அதில் ஒன்று சாதாரண வரிசை திட்டத்தில் பெறப்பட்ட மின் இணைப்பு எண் : 236/5.0HP திரு. அ. நடேசநாய்க்கர் த.பெ. அப்பு நாயக்கர் பெயரிலும், மற்றொன்று ரூ.10000/– வரிசை திட்டத்தில் மின் இணைப்பு எண்:247/5.0HP திருமதி ரத்தினாம்பாள் க/பெ அய்யசாமி பெயரிலும் பெறப்பட்டது. மற்றொரு கிணற்றில் எந்தவொரு மின்இணைப்பும் இல்லை. ஆனால் மனுதாரர் மின்சாரம் அளிக்க வேண்டி அளித்த வருவாய் சான்றில் உள்ள கணிணி சிட்டாவில் விண்ணப்பித்த சர்வே எண் : 64/2D யில் உள்ள இடம்

மூல விண்ணப்பதாரரான திரு.நடேச நாய்க்கர் பெயரிலும், தற்போது மின் இணைப்பு கோரும் திரு. அய்யப்பன் பெயரில் மட்டுமே இருந்தது. ஏனைய வாரிசுதாரர்களின் பெயர்களும் இல்லை. கூட்டுதாரரான திருமதி. ரத்தினாம்பாள் பெயரும் இல்லை.

4.4 ஆனால் இதுகுறித்து 15.11.2010–ல் வழங்கப்பட்ட வட்டாட்சியர் சான்றில் மேற்கண்ட நிலம் திரு. அய்யப்பன் அவர்களுக்கும், திருமதி. ரத்தினாம்பாள் அவர்களுக்கும் மற்றும் ஏனைய கூட்டுதாரர்களுக்கும் சொந்தம் எனவும், ஏனைய கூட்டுதாரரர்களின் ஒப்புதலுடன் மின் இணைப்பு வழங்கலாம் என்றும் சான்றளிக்கப்பட்டது.

4.5 எனவே கூட்டுதாரரான திருமதி ரத்தினாம்பாள் பெயர் கணினி சிட்டாவில் இல்லாததால் அது குறித்து உரிய ஆவணங்கள் அளிக்க வேண்டி கடந்த 24.09.2014–அன்று உதவிபொறியாளர் அரியலூர் அவர்களால் கடிதம் அளிக்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட நபரால் எந்தவித ஆவணங்களும் அதற்கு அளிக்கப்படவில்லை. இத்தருணத்தில் மனுதாரர் நுகர்வோர் குறைத்தீர்க்கும் மன்றத்தை அனுகினார்.

4.6 கடந்த 27.11.2014ல் நடைபெற்ற மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் கலந்துகொண்டு மேற்கண்ட சர்வே எண்ணில் தனது தகப்பனார் பெயரிலுள்ள மின் இணைப்பு எண் 236–ஐ தனது சகோதரர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்துகொண்டும், விட்டுபோன பெயர்களை சேர்த்து வட்டாட்சியர் சான்று, சிட்டா மற்றும் வருவாய் ஆவணங்களை பெற்று வாரிய விதிமுறைப்படி மின் இணைப்பு பெற நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றத்தின் முன் சமர்ப்பிப்பதாக ஒப்புதல் அளித்துள்ளார்.

4.7 பதினொரு மாதங்கள் கழிந்து கடந்த 15.10.2015ல் மனுதாரர் மூலம் பெறப்பட்ட மனுவில் மேற்கண்ட சர்வே எண்ணில் கூட்டுதாரரான திருமதி. ரத்தினாம்பாள் க.பெ அய்யாசாமி அவர்கள் இறந்து விட்டதாகவும் அவர்களின் வாரிசுகளான 1. ஆதிமூலம் 2. ரவிசந்திரன் 3. அய்யப்பன் 4. ராமச்சந்திரன் ஆகிய நான்கு பேரையும் சேர்த்து கணிணி சிட்டா கொடுத்துள்ளார். ஆனாலும் தனது சகோதரர் பெயருக்கு மின் இணைப்பு எண் 236–ஐ இது நாள்வரை பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என தெரியவருகிறது.

4.8 எனவே ஒருநபருக்கு ஒருசர்வே எண்ணில் உள்ள கிணற்றுக்கு ஒரு மின்இணைப்புதான் வழங்கப்படும் மற்றொரு மின் இணைப்பு வழங்க இயலாது ஏற்கனவே மேற்கண்ட சர்வே எண் 64/2Dல் உள்ள கிணற்றில் மனுதாரர் திரு. நடேசன் பெயரில் ஏற்கெனவே மின் இணைப்பு உள்ளது. அந்த மின் இணைப்பு வாரிசு அடிப்படையில் திரு. நடேச நாய்க்கர் மகன் அய்யப்பன் அவர்களுக்கு பாத்தியமாகும் இந்நிலையில் விண்ணப்பித்த அதே நபரின் வாரிசுக்கு அதே சர்வே எண்ணில் மீண்டும் ஒரு மின் இணைப்பு கோருவது வாரிய விதிமுறைப்படி அனுமதிக்கப்படதக்கதல்ல. மனுதாரருக்கு இந்த விபரம் CGRF மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அதனையொட்டியே மேற்கண்ட மின் இணைப்பு எண் 236ஐ தன் சகோதரருக்கு பெயர் மாற்றம் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டார் அதை செய்யவில்லை. மேலும் தனது தந்தை பெயரில் உள்ள மின் இணைப்பினை தனது பெயருக்காவது மாற்றி இருக்கலாம் அதையும் செய்யவில்லை.

4.9 மேலும் மனுதாரருக்கு வழங்கப்பட்ட 90 நாள் நோட்டீஸ் 11.01.2010 உடன் முடிவடைகிறது அதன் பிறகு 5 ஆண்டு காலம் வரை தான் மேற்கண்ட விண்ணப்பம் நிலுவையில் உள்ளதாக கருதி மின் இணைப்பு வழங்க பரிசீலிக்கப்படும். எனவே இந்த விபரங்கள் குறித்து மனுதாரருக்கு உதவி மின் பொறியாளர் அரியலூர் மூலமாக கடந்த 06.01.2016 அன்றும், செயற்பொறியாளர் சங்கராபுரம் அவர்கள் மூலமாக கடந்த 16.02.2016 அன்றும் விளக்க கடிதம் அளிக்கப்பட்டது.

4.10 தற்போது அவ்விண்ணப்பித்திற்கு 5 ஆண்டு காலம் முடிவடைந்துவிட்டதால் மனுதாரருக்கு அம்மனுமீது எந்த வித நடவடிக்கையும் எடுக்க, இயலாத நிலை உள்ளது என்பதை தங்களின் மேலான பார்வைக்கு பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :-</u>**

5.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும், தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக, 10.5.2016 அன்று மின் குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர், என். அய்யப்பன் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. செல்வமணி, செயற்பொறியாளர் சங்கராபுரம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6. **<u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

6.1 மேல்முறையீட்டாளர், 2010ம் ஆண்டில், தன்னுடைய தந்தையின் பெயரில் தயார்நிலை பதிவு செய்ய கோரி வாரியம் அனுப்பிய அறிவிப்பின் பேரில், தன்னுடைய தந்தை காலமாகிவிட்டதால், மற்ற வாரிசுகளின் சம்மதத்துடன் மேற்கண்ட விண்ணப்பத்தை தன்னுடைய பெயருக்கு மாற்ற கோரியதாக தெரிவித்தார் ஆனால் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

6.2 மீண்டும் 2013ம் ஆண்டு தேவையான ஆவணங்களுடன் மேற்கண்ட சர்வே எண் 64/2D யிலுள்ள கிணற்றிற்கு தன் தந்தை பெயரில் விண்ணப்பித்துள்ள விண்ணபத்தை தன்னுடைய பெயருக்கு மாற்றம் செய்ய கோரியதாகவும், ஆனால், பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றும் வாதிட்டார். மேலும் அந்த சர்வே எண்ணில் இரண்டு கிணறுகள் உள்ளன என்றும், ஒரு கிணற்றில், அவரது தந்தையின் பெயரில் பெற்ற மின் இணைப்பு எண் 236ம், திருமதி ரத்தினாம்பாள் பெயரில் பெற்ற மற்றுமொரு மின்இணைப்பும் உள்ளன என்றும் தென்கிழக்கில் வேறு ஒரு கிணறு உள்ளது என்றும் அதில்தான் அவர் மின்இணைப்பு கோரி இருப்பதாகவும் தெரிவித்தார்.

6.3 எனவே, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்ததாகவும், மன்றம், அவரின் தந்தையின் பெயரிலுள்ள மின் இணைப்பு எண் 236 ஐ அவரின் சகோதரர் பெயருக்கு

மாற்றம் செய்து கொண்டும் விட்டுப்போன மற்ற பங்குதாரர்களின் பெயர்களையும் சேர்த்து பட்டா, சிட்டா மற்றும் வருவாய் ஆவணங்களுடன் சமர்பித்து வாரிய விதிகளின்படி மின் இணைப்பு பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

6.4 மேலும், மேற்கண்ட சர்வே எண்ணில் மாற்று பங்குதாரர்களின் பெயர் சேர்க்கப்பட்ட பட்டா, சிட்டா நகல் உள்ளன என்றும், அவருடைய தந்தையின் பெயரிலுள்ள மின் இணைப்பு எண் 236 ஐ அவரின் தமயனார் பெயருக்கு மாற்றவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

6.5 அவருடைய தகப்பனார் பெயரிலுள்ள விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்திற்கு தயார்நிலை பதிவு செய்ய கால நீட்டிப்பு 5 வருடங்கள் வரைதான் வழங்க முடியும் என்றும் அந்த காலம் கடந்து விட்டது என்றும் எனவே விண்ணப்பம் காலாவதி ஆகிவிட்டது என்றும் தற்பொழுது வாதுரை செய்யும் வாரிய அதிகாரிகள் ஏப்ரல் 2016ல் அவரிடம், ஏன், கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து மீண்டும் குறிப்பிட்ட படிவத்தில் சான்று வேண்டும் என்று ஏன் கோரினார்கள் என்றும் கேள்வி எழுப்பினார்.

7. <u>எதிர்மனுதாரரின் பிரதிநி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு. செல்வமணி, செயற்பொறியாளர், சங்கராபுரம் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 செயற் பொறியாளர், கள ஆய்வின் பொழுது அந்த சர்வே எண் 64/2D நிலத்தில் வடமேற்கில் ஒரு கிணறும், தென் கிழக்கில் மற்றுமொரு கிணறும் உள்ளது என்று அறியப்பட்டது என்று தெரிவித்தார்.

7.3 வடமேற்கில் உள்ள கிணற்றில் திரு. நடேசன் நாயக்கர் என்ற பெயரில் மின் இணைப்பு எண்.236 உள்ளது என்றும், திருமதி ரத்தினாம்பாள் பெயரில் மின் இணைப்பு எண் 247 உள்ளதாகவும் தெரிவித்து ஆனால் மேல்முறையீட்டாளர் சமர்பித்துள்ள வட்டாட்சியரின் சான்றிதழில், திரு. நடேச நாயக்கர் பெயரும், திரு. அய்யப்பன் பெயரும் தான் இருந்தது என்றும் கூட்டுதாரர்கள் திருமதி. ரத்தினாம்பாள் பெயரும் இல்லை என்பதால் அதுகுறித்த உரிய

ஆவணங்கள் சமர்பிக்க வேண்டும் என்று 24.9.2014 கடிதத்தில் கோரப்பட்டது என்றும், ஆனால் அவ்வாறு ஆவணங்கள் தரப்படவில்லை என்று வாதிட்டார்.

7.4 மேலும், இரண்டு கிணறுகளுக்கும் இடையில் உள்ள தூரம் 90 மீட்டர்கள்தான் உள்ளது என்பதால், NABARD Norms படி, இரண்டு கிணறுகளுக்கு இடையிலுள்ள தூரம் இல்லை என்பதால் ஒருவர் பெயரில் ஒரே சர்வே எண்ணில் இரண்டு கிணற்றிலும் மின் இணைப்பு வழங்க முடியாது என்றும் வாதிட்டார்.

7.5 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் அவருடைய தகப்பனார் பெயரிலுள்ள மின் இணைப்பு எண் 236–ஐ அவருடைய சகோதரர் பெயரில் மாற்றம் செய்து கொண்டும், பட்டா, சிட்டா ஆகிய ஆவணங்களில் விட்டுப் போன பெயர்களை சேர்த்து, வட்டாட்சியர் சான்று, சிட்டா மற்றும் ஆவணங்களை சமர்பித்து வாரிய விதிகளின்படி மின் இணைப்பு பெற்றுக் கொள்கிறேன் என்று மன்றத்தில் உறுதி அளித்திருந்தார் என்றும். ஆனால் அவ்வாறு ஆவணங்களை 9.1.2015–ற்கு முன்பாக சமர்பிக்கவில்லை என்றும் தெரிவித்து, எனவே, விண்ணப்பம் தள்ளுபடிதான் செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

7.5 மேலும், மேற்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்ட 11 மாதங்கள் கழிந்த பின்பு, 15.10.2015ல் மேற்கண்ட சர்வே எண் 64/2D ல் கூட்டுதாரரான திருமதி ரத்தினாம்பாள் இறந்துவிட்டதாகவும், அவர்களின் வாரிசுகளான, ஆதிமூலம், ரவிச்சந்திரன், அய்யப்பன், ராமச்சந்திரன் ஆகிய நான்கு பேரையும் சேர்த்து கணினி சிட்டா சமர்பித்துள்ளார் ஆனால் மின் இணைப்பு எண் பெயர் மாற்றம் இதுவரை செய்யப்படவில்லை. சர்வே எண் 64/2D ல் உள்ள கிணற்றில் ஏற்கனவே திரு. நடேசன் அவர்கள் பெயரில் ஒரு மின் இணைப்பு உள்ளது. அது வாரிசு அடிப்படையில், மேல் முறையீட்டாளர் திரு. அய்யப்பன் அவர்களுக்கும் சொந்தமாகும். மேற்கண்ட நிலையில், விண்ணப்பித்த நபரின் வாரிசுக்கு, அந்த சர்வே எண்ணில் மீண்டும் ஒரு மின் இணைப்பு வழங்குவது வாரிய விதிகளின்படி அனுமதிக்கத்தக்கது அல்ல என்றும் வாதாடினார்.

7.6 மேலும் 6.1.2016 மற்றும் 16.2.2016 நாளிட்ட கடிதங்களில் உதவி பொறியாளரும், செயற்பொறியாளரும் முறையே, 90 நாள் அறிவிப்பு வழங்கப்பட்டு 5 வருடங்கள் கழிந்து

விட்டதால், அவரின் மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

8. **<u>மின்குறை தீர்ப்பாளரின் தீர்வு : -</u>**

8.1 இருதரப்பினரின் வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு விவசாய விண்ணப்பம் தயார்நிலையை பதிவு செய்ய அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதன் கெடு நாள் முடிந்த பின்பு எவ்வளவு காலத்திற்குள் தயார்நிலையை பதிவு செய்ய வேண்டும்?

(ii) ஒரு சர்வே எண்ணில் ஒருவர் பெயரில் எத்தனை விவசாய மின் இணைப்புகள் வழங்க முடியும் ?

(iii) மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான அவருடைய தகப்பனார் பெயரில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை அவரின் பெயருக்கு மாற்றம் செய்து மின்இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா ?

9. **<u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u> :–**

9.1 விவசாய மின் இணைப்புகளை பொருத்தவரையில், தயார் நிலையை பதிவு செய்வது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி (Supply Code) மற்றும் பகிர்மான விதி தொகுப்பு (Distribution Code) தொகுப்பில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமம்தாரர் கூறிய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும்.

9.2 எதிர்மனுதாரர் விவசாய மின் இணைப்பு கேட்கும் விண்ணபதாரர்கள் தங்களின் மனுவின் பேரில் தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள 90 நாட்கள் முடிந்த 5 வருடங்கள் வரை, தயார்நிலையை பதிவு செய்யலாம் என்று தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக தலைமை பொறியாளர் திட்டமிடல் அவர்களின் 22.9.2009 நாளிட்ட கடிதத்தை ஆராய விரும்புகிறேன்.

*"1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice.*
*2. The applications which were kept pending (except court case/ dispute case after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant.*
*3. Cancelled applications need not be revoked.*
*4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged."*

**9.3** மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணபப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை, ஏற்கனவே வழங்கப்பட்ட ஒருவருட கால அவகாச நீட்டிப்பிற்கு பின்பும் விண்ணபப்பதாரர் / விண்ணபப்பதாரரின் வாரிசுக்கு தங்களது தயார் நிலையை பதிவு செய்ய 90 நாட்கள் அறிவிப்பு கடிதத்தின் காலக்கெடு முடிந்த 5 வருடங்கள் வரை காலநீட்டிப்பு வழங்கலாம் என்று தெரிகிறது. மேலும் இது சாதாரண வரிசையிலுள்ள (Normal) பதிவு மூப்பின்படி வழங்கப்படும் அறிவிப்புகளுக்குத்தான் பொருந்தும். மேலும் மேற்கண்ட விதி, தயார் நிலையை பதிவு செய்யக்கோரி விடுத்த அறிவிப்பின் 90 நாட்கள் கடந்த பின்பு மேற்கண்ட நிலத்தை வாங்கியவர்களுக்கு பொருந்தாது என்றும் தெரிகிறது (13.12.2010 நாளிட்ட ஆணையின்படி, மேற்கண்ட கால அவகாசம் நிலத்தை வாங்கியவர்களுக்கும் பொருந்தும் என்று தெரிகிறது). மேலும் 90 நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு 5 வருடங்கள் கழிந்த விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிகிறது.

9.4 மேற்கண்ட தலைமை பொறியாளர் / திட்டமிடல் 22.9.2009 நாளிட்ட ஆணையின்படி, விவசாய விண்ணப்பங்களின் சாதாரண வரிசையின் மூப்பு அடிப்படையில் தயார் நிலையை பதிவு செய்ய கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பிலுள்ள காலக்கெடுவான 90 நாட்கள் முடிந்த நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை, விண்ணப்பதாரர் அல்லது அவரின் வாரிசுகள் தங்கள் தயார்நிலையை பதிவு செய்துகொள்வதற்கு கால அவகாசம் வழங்க வாரிய விதிகளில் இடமுண்டு என்று தெரிகிறது.

## 10. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

10.1 எதிர்மனுதாரர், சர்வே எண் 64/2Dல் இரண்டு கிணறுகள் உள்ளன என்றும், அவற்றுள் வடமேற்கில் உள்ள கிணற்றில் ஏற்கனவே திரு நடேசன் பெயரில் விவசாய மின் இணைப்பு உள்ளது என்பதால், அவரின் பெயரிலுள்ள அதே சர்வே நம்பரிலுள்ள தென்கிழக்கிலுள்ள கிணற்றிற்கு மேலும் ஒரு மின் இணைப்பு அவர் பெயரில் வழங்க முடியாது என்று வாதிட்டார்.

10.2 மேலும், வாரிய உத்தரவின்படி, ஒரே சர்வே எண்ணில் ஒருவர் பெயரில் வெவ்வேறு கிணறுகளில் இரண்டு மின் இணைப்புகள் வழங்கலாம் என்று உள்ளது என்றும் ஆனால், அந்த கிணறுகளுக்கிடைய உள்ள இடைவெளி NABARD வெளியிட்டுள்ள விதியின்படி இருக்க வேண்டும் என்று வாதிட்டார் எனவே தலைமை பொறியாளர், திட்டமிடல் மற்றும் வளமையத்தின் 23.10.2010 நாளிட்ட ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*The following instructions are issued in regard to effecting of new agricultural service connection :*

*1. More than one agricultural service connection may be effected to the same owner in the same SF to his independent wells with the spacing norms issued by NABARD guidelines and to effect more than one agricultural service connection in the same well to the co-owners, with the condition that the applicant should have minimum of 0.5 acre of land to be irrigated. [The copy of the spacing norms issued by CE/PWD/Chennai is enclosed].*

10.3 மேற்கண்ட தலைமை பொறியாளரின் ஆணையின்படி ஒரு சர்வே எண்ணில், ஒருவருக்கு NABARDன் விதிப்படி இடைவெளியில் அமைந்துள்ள அவரின் தனி தனி கிணறுகளுக்கு, ஒரு மின் இணைப்பிற்கு மேல் வழங்கலாம் என்று தெரிகிறது.

10.4 இது சம்பந்தமாக நான் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 29(2) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி 29(2) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"29 Service Lines :***
*xxx xxx xxx*
*(2) In agricultural connections where the consumer requires a separate service connection for utilizing energy for radios and other appliances including domestic lighting in the farm house, more than one service connection in the same Survey Field Number /sub-divided survey field number will be permitted.*
*xxx xxx xxx*

10.5 மேற்கண்ட விதியை நாம் கூர்ந்து படிக்கும் பொழுது அறிவது பண்ணை வீட்டில் வானொலி மற்றும் மற்றைய உபகரணங்களை பயன்படுத்தவும், வீட்டில் விளக்கு எரிவதற்கும், தேவை என ஒரு நுகர்வோர் விரும்பினால், ஒரு வேளாண்மை மின் இணைப்போடு வேறு மின் இணைப்பும் ஒரு சர்வே எண் அல்லது துணை சர்வே எண்ணில் வழங்கப்படும் என்று தெரிகிறது.

10.6 மேற்கண்ட விதியின்படி ஒரு சர்வே எண்ணில் அல்லது பிரிவு சர்வே எண்ணில் வேளாண்மை மின் இணைப்பு ஒன்றுதான் தரமுடியும் ஆனால், பண்ணைவீட்டிற்கு வீட்டு உபயோகத்திற்கு என வேறு மின் இணைப்பும் பெற்றுக் கொள்ளலாம் என்று உள்ளது. எனவே, மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 29(2)ன் படி ஒரு சர்வே எண்ணில் ஒருவர் பெயரில் ஒரு விவசாய மின் இணைப்பு தான் வழங்க முடியும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

11. <u>வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு:–</u>

11.1 மேல்முறையீட்டாளர், சர்வே எண் 64/2D என்ற நிலத்தில் வடமேற்கில் ஒரு கிணறும், தென்கிழக்கில் ஒரு கிணறும் உள்ளது என்று தெரிவித்து அவரது தகப்பனார் பெயரில் மின் இணைப்பு எண் 236 வடமேற்கில் உள்ள கிணற்றில் உள்ளது என்றும், தென் கிழக்கிலுள்ள கிணற்றில் எந்த ஒரு மின் இணைப்பும் இல்லை என்றும் தெரிவித்து, எனவே, அவரின் தந்தை

பெயரில் எண்.2620, நாள் 18.12.1987 என பதிவு செய்யப்பட்டுள்ள விவசாய மின் இணைப்பு விண்ணப்பத்தை தனது பெயருக்கு மாற்றி மின் இணைப்பு வழங்க உத்தரவு இடவேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

11.2 மேலும், தற்பொழுது, தயார் நிலையை பதிவு செய்வதற்கு கால அவகாசமான ஐந்து வருடகாலம் 1/2015 முடிந்து விட்டது என்று வாதிடும் எதிர்மனுதாரரின் அலுவலர்கள், தன்னிடம் 24.3.2016ல் கிராம நிர்வாக அலுவலரிடம், சான்று வாங்கி வரும்படி கோரியது ஏன் என்றும் கேள்வி எழுப்பினார்

11.3 எதிர்மனுதாரர் மேற்கண்ட சர்வே எண் 64/2D ல் இரண்டு கிணறுகள் உள்ளன என்றும், ஒரு கிணற்றில் ஏற்கனவே திரு. நடேச நாயக்கர் பெயரில் மின் இணைப்பு எண் 236 உள்ளது என்றும், திருமதி ரத்தினாம்பாள் பெயரில் மற்றுமொரு மின் இணைப்பு எண் 247 உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், பெயர் மாற்றம் கோருவதற்காக அளிக்கப்பட்ட ஆவணங்களில் பட்டாவில் மேற்கண்ட திருமதி ரத்தினாம்பாள் பெயர் இல்லை என்பதாலும் ஆனால் வட்டாட்சியர் 15.11.2010ல் அளித்துள்ள சான்றில் மேற்கண்ட நிலம் திரு. அய்யப்பன், அவர்களுக்கும், திருமதி. ரத்தினம்பாள் அவர்களுக்கும் மற்றும் ஏனைய கூட்டுதாரர்களுக்கும் சொந்தம் என்று தெரிவித்து ஏனைய கூட்டுதாரர்களின் ஒப்புதலுடன், மின்சாரம் வழங்கலாம் என்று சான்று அளித்துள்ளதால், கனிணி சிட்டாவில் திருமதி ரத்தினம்பாள் பெயர் இல்லை என்பதால் தகுந்த ஆவணங்கள் வேண்டும் என்று 24.9.2014 அன்று கோரப்பட்டது. ஆனால் அவர் எந்த ஆவணங்களும் தரவில்லை. கடந்த 27.11.2014 அன்று நடைபெற்ற மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் அவருடைய தகப்பனார் பெயரில் உள்ள மின் இணைப்பு எண் 236 ஐ அவருடைய சகோதரர் பெயருக்கு மாற்றம் செய்து, ஆவணங்களில் விட்டுப்போன பெயர்களையும் சேர்த்து வட்டாட்சியர் சான்று, சிட்டா மற்றும் வருவாய் ஆவணங்களை சமர்ப்பித்து வாரிய முறைப்படி மின் இணைப்பு பெற்றுக் கொள்கிறேன் என்று ஒப்புதலை அளித்துள்ளார். அந்த ஒப்புதலின் பேரில் மன்றம் பொற்பாலம்பட்டு கிராம சர்வே எண்.64/2D இல் உள்ள மொத்த நிலத்திற்கு உரிமைதாரர்களின் விடுபட்டுபோன பெயர்களையும் சேர்த்து

வட்டாட்சியர் சான்று, சிட்டா மற்றும் வருவாய் ஆவணங்களை சமர்ப்பிக்கும்பட்சத்தில் மின்இணைப்பு வழங்குவது சம்பந்தமாக வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவு இட்டது.

11.4 ஆனால், மேல்முறையீட்டாளர் 11 மாதங்கள் கழித்து 15.10.2015ல் மேற்கண்ட சர்வே எண்ணில் கூட்டுதாரரான திருமதி. ரத்தினாம்பாள், க/பெ அய்யாசாமி அவர்கள் இறந்து விட்டார்கள் என்று தெரிவித்து அவர்களின் வாரிசுகளான 1) ஆதிமூலம், 2) ரவிச்சந்திரன், 3) அய்யப்பன் 4) ராமச்சந்திரன் ஆகிய நான்கு பேரையும் சேர்த்து கணினி சிட்டா கொடுத்துள்ளார்கள். ஆனால், மின்இணைப்பு எண்.236ஐ இது நாள்வரை பெயர் மாற்றம் செய்யவில்லை என்று வாதிட்டுள்ளார்.

11.5 மேலும், வடமேற்கில் உள்ள கிணற்றிற்கு தென்கிழக்கிலுள்ள கிணற்றிற்கும் இடையில் உள்ள தூரம் சுமார் 90 மீட்டர்கள் என்றும், மேற்கண்ட இடைவெளி NABARD தெரிவித்துள்ள இடைவெளியை விட குறைவு என்பதால், ஒரு சர்வே எண்ணில் இரண்டு விவசாய மின்இணைப்புகள் ஒருவர் பெயரில் கொடுக்க முடியாது என்றும் வாதிட்டுள்ளார்.

11.6 ஒரு நபருக்கு ஒரு சர்வே எண்ணில் உள்ள கிணற்றிற்கு ஒரு மின்இணைப்பு தான் வழங்க முடியும் மற்றொரு மின்இணைப்பு வழங்க இயலாது என்றும், ஏற்கனவே மேற்கண்ட சர்வே எண்.64/2Dல் உள்ள கிணற்றில் மனுதாரர் திரு. நடேசன் பெயரில் ஒரு மின் இணைப்பு உள்ளது. அந்த மின்இணைப்பு வாரிசு அடிப்படையில் திரு. நடேச நாயக்கர் மகன் அய்யப்பன் அவர்களுக்கு பாத்தியமாகும், இந்நிலையில் விண்ணப்பித்த அதே நபரின் வாரிசுக்கு அதே சர்வே எண்ணில் மீண்டும் ஒரு மின் இணைப்பு கோருவது வாரிய விதிமுறைபடி அனுமதிக்கத்தக்கது அல்ல என்றும் எதிர்மனுதாரர் வாதிட்டுள்ளார்.

11.7 மேற்கண்ட வாதங்களின்படி எதிர்மனுதாரர் கீழ்கண்ட இரண்டு காரணங்களால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று வாதாடுகின்றார்.

(i) மன்றத்தின் தீர்வின்படி அவர் பொற்பாலம்பட்டு சர்வே எண்.64/2Dல் உள்ள மொத்த நிலத்திற்கும் உரிமைதாரர்களான விடுபட்டுப்போன பெயர்களையும் சேர்த்து வட்டாட்சியர்

சான்று மற்றும் வருவாய் ஆவணங்கள் பெற்று சமர்ப்பிக்கும் பட்சத்தில் வாரிய விதிகளின்படி மின்இணைப்பு நடவடிக்கை எடுக்க உத்தரவு இட்டுள்ளது. வாரிய விதிகளின்படி விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பிலுள்ள கெடு நாளிலிருந்து 5 வருடங்களுக்குள் தயார் நிலையை பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாத விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படவேண்டும். மேற்கண்ட கால அவகாசம் முடிவடைந்து விட்டதால் மனுதாரரின் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

(ii) ஒரு சர்வே எண்ணில் ஒரு நபருக்கு ஒரு விவசாய மின்இணைப்பு தான் வழங்க விதிகளின்படி முடியும். திரு. நடேச நாயக்கர் பெயரில் மேற்கண்ட சர்வே எண்ணில் ஏற்கனவே ஒரு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அது அவரின் வாரிசுக்கும் சொந்தம். எனவே, அவரின் பெயரிலுள்ள விண்ணப்பத்தை அவரின் மகனாகிய திரு. அய்யப்பன் பெயருக்கு மாற்றம்செய்து மின்இணைப்பு வழங்க முடியாது.

11.8 என்னுடைய வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி ஒரு விவசாய விண்ணப்பத்திற்கு தயார் நிலையை பதிவு செய்ய அறிவிப்பு வழங்கியிருந்தால் அந்த அறிவிப்பில் உள்ள 90 நாட்கள் முடிந்த பின்பும் 5 வருடங்களுக்குள் அவர் தயார் நிலையை பதிவு செய்யலாம் என்று வாரிய விதி உள்ளது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளருக்கு 90 நாள் தயார் நிலையை பதிவு செய்ய அறிவிப்பு வழங்கப்பட்ட நாள் | 8.10.2009. |
| மேற்கண்ட அறிவிப்பில் தயார் நிலையை பதிவு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ள கெடு நாள் | 11.1.2010. |
| எனவே, தயார் நிலையை பதிவு செய்ய வாரிய விதிகளின்படி கொடுக்கப்பட்டுள்ள 5 வருடம் முடியும் நாள் | 10.1.2015. |

11.9 இந்த மேல்முறையீட்டாளர் தயார்நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள கால கெடுவான 10.1.2015 தேதிவரை சரியான ஆவணங்களை சமர்ப்பித்து தன்னுடைய தயார் நிலையை பதிவு செய்யவில்லை. எனவே, அவருடைய விண்ணப்பம் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

11.10 என்னுடைய வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வின்படி, ஒரு சர்வே எண்ணில் ஒருவர் பெயரில் ஒரு விவசாய மின்இணைப்புதான் பெறமுடியும். திரு. நடேச நாயக்கர் அவர்களின் பெயரில் பொற்பாலம்பட்டு சர்வே எண்.64/2Dல் ஏற்கனவே ஒரு விவசாய மின்இணைப்பு உள்ளது. அந்த மின்இணைப்பின் எண்.236 ஆகும்.

11.11 திரு. நடேச நாயக்கர் அவர்கள் தன்னுடைய பெயரில் அதே சர்வே எண்ணில் உள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு வேண்டி தன்னுடைய விண்ணபப்த்தை 18.12.1987ல் பதிவு செய்துள்ளார். அந்த விண்ணபத்தின் பதிவு எண்.2620, நாள் 18.12.1987 ஆகும்.

11.12 திரு. நடேச நாயக்கர் பெயரில் மேற்கண்ட சர்வே எண்.64/2D-ல் ஏற்கனவே ஒரு மின்இணைப்பு உள்ளதால் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 29(2)ன் படி மற்றுமொரு மின்இணைப்பு அவர் பெயரில் அதே சர்வே எண்ணில் வழங்க முடியாது. எனவே, திரு. நடேச நாயக்கர் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பம் மேலும், ஒரு மின் இணைப்பை சர்வே எண்.64/2Dல் உள்ள கிணற்றிற்கு பெறுவதற்கு தகுதியற்றது என்று நான் கருதுகிறேன்.

11.13 பத்தி எண்.11.8, மற்றும் 11.12ல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளரின் தந்தையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணபத்தினை அவரின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 12. முடிவுரை

12.1 வழக்கெழு வினா ஒன்று, இரண்டு மற்றும் மூன்று ஆகியவற்றிற்கான தீர்வின்படி, மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான அவருடைய தகப்பனார் பெயரில் பதிவு செய்துள்ள

விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தினை அவரின் பெயருக்கு மாற்றம் செய்துஅவருக்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

12.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.14/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. என். அய்யப்பன்,
த/பெ நடேசன் (லேட்),
பொற்பாலம்பட்டு கிராமம்,
மையனூர் அஞ்சல்,
சங்கராபுரம் வட்டம்

2) மேற்பார்வை பொறியாளர்,
கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
லயன்ஸ் கிளப் பில்டிங்,
சேலம் மெயின் ரோடு, கள்ளக்குறிச்சி – 606 202.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
லயன்ஸ் கிளப் பில்டிங்,
சேலம் மெயின் ரோடு, கள்ளக்குறிச்சி – 606 202.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணிணி) – **மின்குறைதீர்ப்பாளர் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்
சென்னை – 600 008.